செய்தி வெளியீடு:

செ.வெ.எண்:58 நாள்:27.11.2017

**நீலகிரி மாவட்டத்தில் மீலாது நபி தினத்தை முன்னிட்டு வருகிற 02.12.2017 அன்று அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல்பார்கள் மற்றும் தமிழ்நாடு ஹோட்டல்களில் (யூனிட் I&II) உள்ள பார்கள் மூடப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ,ப., அவர்கள் தகவல்**

நீலகிரி மாவட்டத்தில் மீலாது நபி தினத்தை முன்னிட்டு வருகிற 02.12.2017 அன்று தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981 மற்றும் தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகள் 1989 ஆகியவற்றின்படி எப்.எல் 1 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகள், எப்.எல்.2 (கிளப்கள்), எப்.எல்.3 (பார் ஹோட்டல்கள்), எப்.எல்.3ஏ தமிழ்நாடு ஹோட்டல் யூனிட் I & II ஆகியவற்றில் எவ்வித மதுபானங்களும் விற்பனை செய்யப்பட மாட்டாது என பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. 02.12.2017 அன்று கட்டாயமாக அனைத்து மதுபான சில்லறை விற்பனை கடைகள், கிளப்கள், ஓட்டல்பார்கள் மற்றும் தமிழ்நாடு ஹோட்டல்களில் (யூனிட் I & II ) உள்ள பார்கள் மூடப்படும். இந்த உத்தரவை மீறி மதுபானங்கள் விற்பனை செய்யும் மேற்படி உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.